

Vol.22 | No. 2 | February 2018

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## KARUNAI ILLAM SILVER JUBILEE
## 20.01.2018







Priestly Ordination - Dn. Anto Prabin CMI, Pilankalai
01.01.2018



TCYM, Media Camp, St. Alphonsa College
26-28.01.2018




Anniversary, Santhi Nilayam, Paruthivilai,
31.01.2018

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 22 No :2 February 2018

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 04 |
| பேராயர் திருமுகம் | 05 |
| குழந்தை ஈசோ | 09 |
| சிறுமலர் | 10 |
| Feast and B'day | 10 |
| மறைக்கல்வி | 11 |
| இல்வாழ்வு இயக்கம் | 16 |
| இளையோர் இயக்கம் | 18 |
| வின்சென்ட் தே பவுல் சபை | 19 |
| சமூக சேவை சங்கம் | 21 |
| செங்கோட்டைச் செய்திகள் | 25 |
| மறைவட்டச் செய்திகள் | 26 |
| Bishop's Engagements | 28 |

*Editorial Board*

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**
*Chief Editor*
**Fr. Joseph Santhosh**
*Executive Editor*
**Mr. Soundara Raj**
*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250833
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/78/2018 31 January 2018

Dears,

Recently, I received a letter from Rev. Fr Joseph Madathil, one of the pioneer missionaries of Kanyakumari Mission. At present, he is living at Priests' Home in Changanacherry. The letter reminisces the good old days that he spent in the missions of Kanyakumari spreading the Gospel while undergoing much privation. In recent times, the Holy Father extended the territory of our Eparchy. During the Synod of Bishops that was held in January 2018, a considerable time was spent in evolving strategies for the mission work in the Syro-Malabar Church. In these contexts, I believe, the letter that Fr Joseph Madathil wrote will have much significance for us. Hence, I want to reproduce his letter in my circular.

May it please your Excellency,

I wish your Excellency a very happy Christmas and a grace-filled New Year. I received this morning your greeting card that mentions the new missions that you have begun at Kuzhithurai: Kallukatti. In 1963, I came to settle at Manjalumoodu. From there, I used to visit Marthandam and Padanthalumoodu regularly. Kuzhithurai was an important town at that time. We had also missions at Nagercoil and Soosaipuram near Karungal, Padanthalumoodu. At that time, we could not find a suitable place at Kuzhithurai. I am happy that you are able to start the missions at Kuzhithurai: Kallukatti now. In those years, on Sundays after the mass at Manjalumoodu, I used to go by bicycle to Vayalinkarai. After two years of my stay, I was able to gather sufficient money with the help of an American friend to purchase a scooter.

After purchasing the scooter, I was able to travel regularly to Soosaipuram and Nagercoil. We were able to register two societies at Soosaipuram and Manjalumoodu with the help of Rajayan from Soosaipuram. Through these societies, we were able to help the poor people. We had many opportunities to start new missions around Manjalumoodu. But due to financial constraints,we could begin only five Centres. They were Thettivilai, Mukkoottukal, Malaicode, Karode

and Marappady.

I also approached late Rev. Fr Andrews CMI, then Regional Superior, to open new Centres at Kaliyal, Muzhucode, Azhakiyamandapam and Netta. At Muzhucode I visited all the Catholic houses and arranged the list of families for the CMI Fathers. Two CMI Fathers were sent to begin the Centres in the Kanyakumari Mission. Rev. Fr James stayed at Manjalumoodu while Rev. Fr Benedict stayed at Kaliyal.

The then Archbishop of Changanacherry, Mar Mathew Kavukatt recognized the importance of the missionary work at Kanyakumari region and sent two Priests to help in the work of evangelization. He also requested SH Sisters to workin the missions in running the schools. Whenever the Archbishop visited the Missions, he used to stay with me at Manjalumoodu. With the financial assistance of the Archbishop and a loan taken from SD Sisters, we were able to purchase 14 acres of land at Karode. We also bought 3 Acres of land at Manjalumoodu for SDS Sisters, another 8 acres of land at Mukkoottukal where we had planned for a Higher Secondary School, a Church in honour of Holy Family and a Minor Seminary.

Only after 4 Years I could return the loan to the SDS Sisters. I was transferred to Amboori, where I was able to construct a Church. Archbishop Mar Antony Padiyara blessed it in 1975. Afterwards, I left Amboori for a year for on-going formation. While developing the mission Centres, we also gave much emphasis to the education of poor children. I have sent many boys and girls after their Matriculation to Bangalore for TTC. After their TTC, they were invariably appointed in our Schools as teachers. We already had Schools at Varuthattu and Soosaipuram. Later, we opened Schools at Mukkoottukal, Kaliyal and Arukani. All these three Schools are now become Higher Secondary Schools. I also rendered my services in the Archdiocese of Changanacherry in the Changanacherry Social Service Society and in other Parishes. I returned a second time to Kanyakumari Missions. I worked at Nithiravilai, Vayalinkarai and Christurajapuram. Later Archbishop Padiyara asked me to take charge of KKSSS. I also served at Palugal and Annikkarai Centres.

I am concluding this very long letter. I hope under your able leadership, the Eparchy of Thuckalay would flourish in the fields of evangelization, education and social development. May the infant Jesus bless you, and all Fathers and Sisters working with you!

CONCLUSION

We are entering the holy season of Lent on 12 February 2018. During the Holy Qurbana, we pray: "Through fasting, prayer and repentance, let us please Christ and his Father." Let us thank God for this time of Lent. As we enter into this discipline, let us God to show us what we need to see in order that we may more fully follow the Gospel. Let us seek to be filled, directed and empowered by the Holy Spirit so that we can overcome temptations in our own lives just as Jesus overcame the temptations in the desert. Let us also ask for the grace to be effective in our ministries as we take up on ourselves the Lenten discipline.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+George Rajendran SDB

Bishop of Thuckalay

---

## அருட்சகோதரர்களிடமிருந்து...




இறையருளால் அனைத்து அருட்சகோதரர்களும் நலமாக உள்ளனர். தற்போது அனைத்து அருட்சகோதரர்களும் தங்கள் இரண்டாம் பருவ தேர்வுக்காக தயாரித்து வருகின்றனர்.கேரளாவில் பயிலும் அருட்சகோதரர்கள் தேர்வுக்குப்பின் மார்ச் மாத இறுதியில் மறைமாவட்டத்திற்கு திரும்புகின்றனர். உரோமையில் பயிலும் அருட்சகோ அபிலாஷ் நன்றாக பயின்று வருகிறார். டிசம்பர் 31 அன்று திருத்தந்தையின் தலைமையில் மாலை செபத்தில் திருப்பணியாளராக கலந்து கொண்டார் என்பது பெருமை வாய்ந்தது.

மெய்யியல் மூன்றாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு அனைத்தடக்கத் தேர்வு நடைபெற்று வருகிறது.

திருத்தொண்டர்கள் சுபின், ஜெபனேஷ் ஆகியோர் தங்கள் குருத்துவ அருட்பொழிவுக்கான முன் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். திருத்தொண்டர் சுபின் அவர்களின் குருத்துவ அருட்பொழிவு ஏப்ரல் 2 அன்றும் திருத்தொண்டர் ஜெபனேஷ் அவர்களின் குருத்துவ அருட்பொழிவு ஏப்ரல் 7 அன்றும் தத்தம் பங்குகளில் நடைபெற உள்ளன.

பெனடிக்டைன் சபையில் பயின்று வரும் கல்லுவிளையை சார்ந்த திருத்தொண்டர் போரத்திக் அவர்களின் குருத்துவ அருட்பொழிவு ஏப்ரல் 6 அன்று நடைபெறும்.

அருட்சகோதரர் போஜி|தலைவர்

Prot. No. 0184/2018

# CIRCULAR

Circular of the Major Archbishop after the XXVI Synod
of the Bishops of the Syro-Malabar Church, Session 1,
held from 8 to 13January 2018
in the Major Archiepiscopal Curia at Mount St Thomas, Kakkanad.

---

Dear Brothers and Sisters in Jesus Christ,

The Twenty sixth Synod of Bishops of the Syro-Malabar Church was held at the time of the celebration of the Silver Jubilee of the declaration of the Church as a Major Archiepiscopal Church.

The Synod congratulated and welcomed at the beginning of the session Mar Joseph Pamplany, the Aux.Bishop of Tellicherry,Mar Sebastian Vaniapurakal, the Curia Bishop, Mar Tony Neelankavil, the Aux.Bishop of Trichur and Mar Sebastian Pozholiparambil, the Bishop of the newly erected eparchy ofHossur who were attending the synod for the first time. The appointments of Fr. John Nellikunnel, Bishop-elect of Idukki, and of Fr. JamesAthikalam MST, Bishop-elect of Sagar, were declared during the Synod. Please keep the new bishops in your prayers.

The Synod also expressed its gratitude to late Mar James Pazhayattil and to the present administration of the eparchy of Irinjalakuda for the great effort they had put in for the growth and development of the newly established eparchy of Hossur.

The Synod also offered its congratulations to Mar Raphael Thattil, the newly appointed bishop of the newly created Shamshabadeparchy. With the establishment of this eparchy, the Syro-Malabar Church has got jurisdiction all over India for evangelization and pastoral care. The Synod gratefully acknowledged the services of late Cardinal Mar AntonyPadiyara, Mar Gregory Karotemprel CMI, and Mar Gratian MundadanCMI, the former Apostolic Visitators, for all the preparatory work they had done for the provision of jurisdiction all over India for evangelization and pastoral care.The Synod requests all the eparchies and religious congregations in Kerala to extend their generous support for the new eparchy. The right for evangelization and pastoral care throughout the Country given to the Syro-Malabar Church is a great opportunity for intensification of the evangelization mis-

sion of the Church in India and to strengthen deep bonds of relationship with other surijuris Churches in India. It is very gratifying to note that the all-India jurisdiction was given to the Syro-Malabar Church in its Jubilee year.

The Synod offered its greetings to Mar Jacob Murikan and Mar Tony Neelankavil who were celebrating the silver jubilee of their priestly ordination. I remind you of the need to pray for these Bishops on this occasion.

The synod expressed its deep anguish at the suffering experienced by Christians in the eparchies of Satna,Sagar, and Jagdalpur for the suffering and persecutions they experienced in the recent past.

The details of the Jubilee celebrations were discussed during the Synod. On Jan.13, Holy Qurbana was celebrated in thanksgiving with the participation of all the Bishops. The public meeting held in the afternoon at 2.30p.m. was inaugurated by His Beatitude LuisRaphäelSako, Patriarch of the Chaldean Church. Most Rev. Dr.GiambattistaDiquattro, Apostolic Nuncio, presided over the meeting.His Beatitude Baselios-Mar Cleemis, theMajor Archbishop of the Syro-Malankara Church and President of CBCI,Abp.Cyril Vasil,the Secretary, Congregation for Oriental Churches, Abp.Francis Kallarakal,the former Archbishopof Verapoly, His Excellency Bishop DimitriosSalachas, Exarch emeritus of the Greek Catholic Church, Justice Kurian Joseph, Judge, Supreme Court of India, Sr. Siby, CMC Mother General, Adv. BijuParayannilam, President, Catholic Congress, Mrs. Gigi Sebastian, Secretary, Matruvedi, and Mr.Arun Davis, President SMYM offered their congratulatory messages. Besides the Bishops attending the Synod, Major Superiors of religious congregations, representatives from all the Syro-Malabar Eparchies including priests, consecrated men and women, and lay representatives, especially the youth also participated in the Jubilee celebration.

The Synod discussed seriously the problems experienced by the people engaged in agriculture and emphasized the need to offer security to their lives and work. The need for special protection from the attacks of wild animals encroaching the farmsteads was pointed out.The Synod requested the Government to come to the aid of farmers by constructing protective walls around their farms. The unsympathetic attitude of the Government looks as if the Government is more interested in protecting wild animals than the lives

of the people. The Government and the political parties have to devise strong and sustainable programmes for the protection of the farmers.INFARM and AKCC have to pay special attention in this matter and plan suitable programmes.In order to protect the produce of the farmers and to secure their lives, new financial projects have to be envisaged. The Synod views with anxiety the tendency among farmers to abandon agricultural work. This will definitely create a new form of migration.

You may be well aware that the Synod has formed a new commission for the promotion of vocations. The Synod has viewed with anxiety the decrease of vocations especially for the religious congregations of women. All are requested to cooperate with this commission for the promotion of vocations at the parish and eparchial levels. The parish priests and the religious communities in parishes have amajor role to play in fostering vocations. Organizations like the Mission League should take the initiative to encourage religious vocations among students and the youth.During the years of their formation in the seminaries, they should be made aware of their missionary responsibilities.

The newly ordained priests should be provided with opportunities for working in the missions and the same arrangement may be done for the seminarians during their years of regency. It is also good to encourage the laity and the members of voluntary organizations to work inmission eparchies. Similarly mission-appeals on the part of those who work in mission eparchies should be encouraged in home eparchies in Kerala. The Synod has specially requested the eparchies to help the vocation promoters who come to different eparchies to preach about the missions. There was a suggestion that there should be a special arrangement forthe admissionand formation of seminarians under the direction of the Major Archbishop to work in the missions.

The following are some of the proposals of the Major Archiepiscopal Assembly approved by the Synod to be implemented in all eparchies:

1. When bishops come for various functions in various parishes and institutions make the receptions simple at the entrance of the parish church. Avoid reception from the parish boundary or from the church gate or with flexes and arches along the road.

2. All celebrations are to be

simple. Any kind of publicity is to be merely informative and simple.

3. Institutions run by eparchies/parish churches and institutes of consecrated life are not to ask compulsorydonations for admissions and appointments.

4. Education institutions run by eparchies/parish churches and the institutes of consecrated life are to give concession to poor students as well as to the fourth and following children of Catholic parents.

5. The Catholic Aided schools or schools in the public sectors are to be fostered.

6. Every financially sound parish is to adopt a mission centre and keep a regular contact with it.

7. Skills of senior citizens are to be made use of in every parish.

8. A percentage of the amount of family celebrations is to be set apart for the poor.

9. When some fees /contributions are fixed in a parish, the amount shall be fixed according to the financial status of the families. No compulsory fees/contribution shall be demanded.

10. The data of those who go away from the home parishes for education and jobs are to be kept in the offices at parish/eparchial levels. They should be helped to connect with the local Syro-Malabar Catholic communities where they live or go for studies and do not demand donations as prerequisite for the administration of the sacraments in their local parishes.

The Synod made an evaluation of the steps involved in the sale of the property of the Ernakulam-AngamlayArcheparchyand offered-helpful suggestions for the resolution of the problems that arose from the sale of the property.

The Synod drafted a Pledge Form that the seminarians have to sign before their ordination to Diaconate.Synod approved the Safe Environmentalprogrmmes for Church personnel which would make the priests more aware of their moral responsibilities concerning the children entrusted to their care.

There was a suggestion to strengthen AKCC especially in this year when its Jubilee is being celebrated.

The Synod discussed seriously the pastoral needs of the Syro-Malabar faithful living outside India and decided to continue the discussions in this regard with the authorities concerned. The Synod considered the proposal to make the Syro-Malabar parish in Doha,Qatar an independent parish.

The Synod alsoelectedthe representatives to participate in the next Synod of the Youth in Rome which has the theme "Young People, the Faith and Vocational Discernment".The Synod remembers with gratitude the interactions with the Chaldean Patriarch Luis Sako, Apostolic Nuncio GiambattistaDiquattro,Archbishop Cyril Vasil, the Secretary of the Oriental Congregation, Fr.LorrensoLorusso OP, the Under Secretary,and Msgr. Pascal Gollnisch,the Director Generaland Mr. Dominic Bletry, Chargé d'Affairesof l'Oeuvred'Orientduring the Synodal sittings.

The Synod also discussed the theme of the CBCI plenary session "United in Diversity for a Mission of Mercy and Witness" and made preparatory studies on the theme.

Wishing all of you a fruitful season of Lent,

Yours cordially in Christ,

+George Cardinal Alencherry
Major Archbishop of the Syro-Malabar Church

---

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ



## குழந்தை ஈசோ இயக்கம்

"சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்: அவர்களை தடுக்காதீர்கள்: ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது."

**பொறுப்பாளர்கள் கூடுகை**

17.1.2018 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் கல்லுவிளை பொறுப்பாளர் மற்றும் ஊக்குவிப்பாளர் கூடுகை அலுவலகத்தில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் அவர்கள் குழந்தைகளுக்கு இறைவார்த்தை பயிற்றுவித்தல் பற்றி அறிவுரை வழங்கப்பட்டது.

**சிறப்பு தியானம்**

குழந்தைகளுக்கான சிறப்பு தியானம் பிப்ரவரி 10. 11 ஆகிய நாட்களில் கல்லுவிளை ஆசீர் அரங்கில் வைத்து நடைபெறும். இறைவார்த்தை பயிற்றுவிக்கும் இத்தியானத்தில் குழந்தைகள் ஆர்வமுடன் பங்கெடுக்க அன்புடன் அழைக்கிறேன்.

**போட்டிகள்**

குழந்தை ஈசோ கலைப் போட்டிகள் 6.2.2018 அன்று ஆறுகாணி மறைவட்டத்திற்கு மேழக்கோடு ஆலயத்திலும், 13.2.2018 அன்று மற்றனைத்து மறைவட்டங்களுக்கும் கல்லுவிளை ஆசீர் அரங்கிலும் நடைபெறும்.

அருட்தந்தை ஜோமோன்
இயக்குநர்

சிறுமலர் MISSION LEAGUE

# சிறுமலர் மிஷன் லீக்

## பொறுப்பாளர் கூடுகை

மறைமாவட்ட மிஷன் லீக் பொறுப்பாளர் கூடுகை 01.01.2018 அன்று படந்தாலுமூடு திருஇருதய ஆலய அரங்கில் வைத்து இயக்குநர் அருட்தந்தை ஷோஜோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செபத்துடன் ஆரம்பமான இக்கூடுகையில் இயக்குநர் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். செயலர் அறிக்கை சமர்ப்பித்தார். தொடர்ந்து திருத்தொண்டு வார கொண்டாட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்டது. அவையாவன:

1. மறைமாவட்டத்திற்குட்பட்ட விரிவாக்கப்பட்ட மறைபரப்புத் தளங்கள் பற்றி அறிதல்
2. அம்மறைபரப்புத் தளங்களுக்காக செபித்தல்
3. அதன் வளர்ச்சிக்காக உதவி நிதி திரட்டுதல்
4. மறைபரப்பு தள தோற்றம், வளர்ச்சி பற்றி கண்காட்சி மற்றும் காணொளி காட்சி தயாரித்தல்

நிறைவில் செயலர் அவர்கள் நன்றி கூற, இறுதி செபத்துடன் இனிதே நிறைவடைந்தது.

அருட்தந்தை ஷோஜோ
இயக்குநர்

## BIRTHDAYS REV FATHERS- FEBRUARY

| FEBRUARY | BIRTHDAYS OF REV. FATHERS |
|---|---|
| 01 | Rev. Fr. Jose Vayalil |
| 07 | Rev. Fr. Shojo Erupathanchilchira |
| 09 | Rev. Fr. Linslal Mangalath |
| 15 | Rev. Fr. Jinu Thekkethalackal |
| 21 | Rev. Fr. Sebi Manimalakandathil |
| 28 | Rev. Fr. Joshi Kulathinkal |
| 28 | Rev. Fr. Prince Maliyil |




"கடவுளது சாயலாக படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும், தூய்மையிலும் வெளிப்படும்" எபே 4:24

விவிலிய கலைவிழா மறைவட்ட போட்டிகள்

2017-2018 ஆம் ஆண்டைய விவிலிய கலைவிழா மறைவட்ட போட்டிகள் டிசம்பர் 26 தக்கலை பிலாங்காலை, 27 படந்தாலுமூடு, 28 மஞ்சாலுமூடு, 29 ஆறுகாணி, 30 நித்திரவிளை, சூசைபுரம் ஆகிய மறைவட்டங்களுக்கு நடத்தப்பட்டன. போட்டிகள் காலை 9 மணிக்கு தொடங்கி மாலை 5 மணிவரை 4 அரங்குகளில் நடைபெற்றன. வெற்றி பெற்றோருக்கு பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டன. இக்கலைவிழாவிற்கு ஒத்துழைப்பு தந்த மறைவட்ட இயக்குநர்கள் மற்றும் செயலர்கள் அனைவருக்கும் நன்றி.

மறைவட்ட வாரியாக முதல்மூன்று இடங்களை பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| ஆறுகாணி மறைவட்டம் | | |
| 1 | திருக்குடும்ப மறைக்கல்வி நிலையம், ஆறுகாணி | 148 |
| 2 | புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், பத்துகாணி | 101 |
| 3 | புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், நெட்டா | 85 |
| மஞ்சாலுமூடு மறைவட்டம் | | |
| 1 | சிறுமலர் மறைக்கல்வி நிலையம், மஞ்சாலுமூடு | 100 |
| 2 | திருச்சிலுவை மறைக்கல்வி நிலையம், மாலைக்கோடு | 83 |
| 3 | புனித மேரி மறைக்கல்வி நிலையம், களியல் | 59 |
| நித்திரவிளை மறைவட்டம் | | |
| 1 | புனித ஜெயமாதா மறைக்கல்வி நிலையம், நித்திரவிளை | 117 |
| 2 | புனித அந்தோணியார் மறைக்கல்வி நிலையம், வயலின்கரை | 93 |
| 3 | புனித சவேரியார் மறைக்கல்வி நிலையம், வாறுதட்டு | 80 |
| தக்கலை பிலாங்காலை மறைவட்டம் | | |
| 1 | புனித மிக்கேல் மறைக்கல்வி நிலையம், காட்டாத்துறை | 118 |

| | | |
|---|---|---|
| 2 | புனித அல்போன்சா மறைக்கல்வி நிலையம், நாகர்கோவில் | 62 |
| 3 | சிறுமலர் மறைக்கல்வி நிலையம், பிலாங்காலை | 47 |
| 3 | புனித சவேரியார் மறைக்கல்வி நிலையம், கைசாலவிளை | 47 |
| சூசைபுரம் மறைவட்டம் | | |
| 1 | புனித சூசையப்பர் மறைக்கல்வி நிலையம், சூசைபுரம் | 111 |
| 2 | கிறிஸ்து அரசர் மறைக்கல்வி நிலையம், பாலப்பள்ளம் | 92 |
| 3 | புனித வியாகப்பர் மறைக்கல்வி நிலையம், மாங்கரை | 84 |
| படந்தாலுமூடு மறைவட்டம் | | |
| 1 | புனித தோமையார் மறைக்கல்வி நிலையம், பளுகல் | 101 |
| 2 | புனித மார்டின் டிபோரஸ் மறைக்கல்வி நிலையம், கழுவன்திட்டை | 83 |
| 3 | புனித மத்தேயு மறைக்கல்வி நிலையம், அண்ணிக்கரை | 72 |

**மறைமாவட்ட கலைப்போட்டிகள்**

மறைவட்ட கலைப் போட்டிகளில் முதல் இரு இடங்களை பெற்ற மாணவர்களுக்கு மறைமாவட்ட அளவிலான போட்டி ஜனவரி 15 அன்று படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயத்தில் நடத்தப்பட்டது. மறைமாவட்ட நிதியாளர் பேரருட்தந்தை டென்சி அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். முழுக்கோடு மாணவிகள் இறைவணக்கம் பாட, ஊக்குவிப்பாளர் திரு. கிறிஸ்துதாஸ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் அவர்கள் போட்டி விதிமுறைகள் பற்றி எடுத்துரைத்து வெற்றி பெற கூறினார். மாணவர்கள் மறைவட்ட வாரியாக 6 வரிசைகளில் ஆறு வண்ண கொடியேந்தி நின்றனர். தொடர்ந்து போட்டிகள் 4 அரங்கில் மாலை 4.30 மணி வரை நடைபெற்றன. வெற்றி பெற்றோர்களுக்கு நிறைவு விழாவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார். இப்போட்டியில் புள்ளிகள் அடிப்படையில் கிடைக்கப்பட்ட இடங்களின் தர வரிசை விபரம்.

| Sl. No | Name of the Sunday School | Points | Ranks |
|---|---|---|---|
| 1 | Holy Family Arukany | 46 | 1 |
| 2 | Little Flowe Manjalumoodu | 43 | 2 |
| 3 | Amala Maria Cheenivilai | 35 | 3 |
| 4 | Holy Cross Malaicode | 31 | 4 |
| 5 | Deva Matha Killiyoor | 30 | 5 |
| 6 | St. Thomas Muzhucode | 23 | 6 |
| 7 | Jaya matha Nithravilai | 21 | 7 |
| 8 | St. Martin De Pores Kazhuvanthittai | 19 | 8 |
| 9 | St. Mary Kaliyal | 18 | 9 |
| 10 | St. Xavier Varuthattu | 18 | 9 |
| 11 | Christ the King Palappallam | 18 | 9 |
| 12 | St.Antony Vayalinkarai | 15 | 10 |
| 13 | St. Joseph Soosaipuram | 13 | 11 |
| 14 | Sacred Heart Pallikonam | 12 | 12 |
| 15 | Sacred Heart Padanthalumoodu | 8 | 13 |
| 16 | St. Alphonsa Nagercoil | 8 | 13 |
| 17 | Holy Family Mukkuttukal | 7 | 14 |
| 18 | St. Thomas Netta | 7 | 14 |
| 19 | St. Thomas Palukal | 6 | 15 |
| 20 | St. Paul Thettiyode | 6 | 15 |
| 21 | Little Flower Pilankalai | 6 | 15 |
| 22 | St. Micheal Kattathurai | 6 | 15 |
| 23 | St. Mary Penuthadam | 3 | 16 |
| 24 | St. Vincent De Paul Marthandam | 3 | 16 |
| 25 | John Paul II Kulasekharam | 3 | 16 |
| 26 | St. James Mankarai | 3 | 16 |
| 27 | Loretto Matha Pilankarai | 3 | 16 |
| 28 | St. Micheal Thettivilai | 1 | 17 |

| | | | |
|---|---|---|---|
| 29 | St. Joseph Kunnuvilai | 1 | 17 |
| 30 | Fathima Matha, Fathimapuram | 1 | 17 |

மறைவட்ட ஆசிரியர்களுக்கான கலைப்போட்டி

மறைவட்ட ஆசிரியர்களுக்கான கலைப்போட்டி ஜனவரி 26 அன்று படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயத்தில் இயக்குநர் தந்தை தலைமையிலும், மறைமாவட்ட நிதியாளர்பேரருட்தந்தைடென்சி அவர்கள் மேற்பார்வையிலும் நடைபெற்றது. முற்பகல் 10 மணிமுதல் மஞ்சாலுமூடு, நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கும், பிற்பகல் 2 மணிமுதல் தக்கலை-பிலாங்காலை, சூசைபுரம், ஆறுகாணி மறைவட்டங்களுக்கும் நடைபெற்றது. மதியம் 1 மணிக்கு அனைத்து மறைவட்டங்களுக்குமான விவிலிய வினாடி வினா போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்றோருக்கு பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

மறைக்கல்வி ஆசிரியருக்கான போட்டியில் அதிக புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் பெயர் விபரம் பின்வருமாறு:

| Sl.No | Arukany Forane | Points | Ranks |
|---|---|---|---|
| 1 | Arukany | 22 | I |
| 2 | Pathukany | 18 | II |
| 3 | Mezhacode | 11 | III |
| 4 | Penuthadam | 1 | |
| **Sl. No** | **Manjalumoodu Forane** | **Points** | **Ranks** |
| 1 | Mukkuttukal | 13 | I |
| 2 | Kaliyal | 13 | I |
| 3 | Marappady | 8 | II |
| 4 | Manjalumoodu | 8 | II |
| 5 | Muzhucode | 5 | III |
| 6 | Karode | 3 | |
| 7 | Malaicode | 2 | |
| **Sl. No** | **Nithravilai Forane** | **Points** | **Ranks** |
| 1 | Varathattu | 19 | I |

| | | | |
|---|---|---|---|
| 2 | Nithravilai | 13 | II |
| 3 | Munchirai | 12 | III |
| 4 | Vayalikarai | 6 | |
| 5 | Christhurajapuram | 2 | |
| **Sl. No** | **Padanthalumoodu Forane** | **Points** | **Ranks** |
| 1 | Palukal | 21 | I |
| 2 | Thettiyode | 8 | II |
| 3 | Kazhuvanthittai | 7 | III |
| 4 | Athencode | 6 | |
| 5 | Padanthalumoodu | 5 | |
| 6 | Marthandam | 5 | |
| **Sl. No** | **Thuckalay-Pilankalai Forane** | **Points** | **Ranks** |
| 1 | Pilankalai | 20 | I |
| 2 | Paraicode | 13 | II |
| 3 | Kattathurai | 8 | III |
| 4 | Maharajapuram | 6 | |
| 5 | Kaisalavilai | 5 | |
| **Sl. No** | **Soosaipuram Forane** | **Points** | **Ranks** |
| 1 | Soosaipuram | 22 | I |
| 2 | Mankarai | 17 | II |
| 3 | Thackalivilai | 9 | III |
| 4 | Palappallam | 3 | |
| 5 | Mathapuram | 1 | |

மறைமாவட்ட இசைக்கருவி போட்டி

மறைக்கல்வி மாணவர்கள் இசைப் பயிற்சியில் முன்னேறவும், அவர்களை ஊக்கப் படுத்தவும் வேண்டும் என்பதற்காக ஆயர் அவர்களின் பரிந்துரையின் படி இசைக்கருவி இசைத்தல் போட்டி இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, மறைமாவட்ட அளவில் ஜனவரி 26 அன்று படந்தாலுமூடு மறைவட்ட அரங்கில் வைத்து கீபோர்டு போட்டி மட்டும்

நடத்தப்பட்டது. பிற்கபகல் 2 மணிக்கு ஆரம்பமான இப்போட்டியில் 55 மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பாக கீபோர்டு இசைக்கருவி இசைத்தனர். முதல் மூன்று இடங்களை பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதற்கு ஒத்துழைத்த அனைத்து அருட்தந்தையர்களுக்கும், தலைமையாசிரியர்களுக்கும் நன்றி.

அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்
இயக்குநர்

---



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

## மாதர் ஜோதிஸ் ஆண்டு விழா

மாதர் ஜோதிஸ் இயக்க 2017-2018 ஆம் ஆண்டு விழா ஜனவரி 7 அன்று காலை 10.30 மணியளவில் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் திருப்பலியுடன் ஆரம்பமானது. முன்னாள் இயக்குநர் அருட் தந்தை ஜோசப் நெடும்புறம் அவர்கள் திருப்பலி நிறை வேற்றி மறையுரை ஆற்றினார். வெள்ளியோடு உதவி பங்குத்தந்தை அருட்தந்தை விஜின் அவர்கள் ஆரோக்கியமான குடும்பம் அமைய தாய்மார்களின் இன்றியமையாக் கடமைகள் மற்றும் தாய்மார்களின் இன்றைய நிலை பற்றி நகைச்சுவையோடு எடுத்துக்காட்டுகள் கூறி வகுப்பு நடத்தினார். தொடர்ந்து மதிய உணவு நடைபெற்றது. பின் மதியம் 2.30 மணியளவில் குருகுல முதல்வர் பேரருட் தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் ஆண்டுவிழா பொதுக்கூட்டானது ஆரம்பமானது. திருமதி. நிஷா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இல்லற வாழ்வில் வெள்ளிவிழா காணும் தாய்மார்களுக்கும் மற்றும் துறவறத்தாரின் பெற்றோர்களுக்கும் பாராட்டுவிழா நடைபெற்றது. அதன்படி இவ்வாண்டு 47 தாய்மார்கள் கீரிடம், மெழுகுவர்த்தி மற்றும் பரிசுகள் கொடுத்து கௌரவிக்கப் பட்டனர். நிகழ்வின் இடையே இளைஞர்களின் ஓரங்க நாடகமும், மாலைக்கோடு குழந்தை ஈசோ இயக்கத்தின் நடனமும், கிறிஸ்துராஜபுரம் தாய்மார்களின் திருவாதிரையும்,

மாதர் ஜோதிஸ் கலைப்போட்டிகளில் முதலிடம் பெற்ற தாய்மார்களின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றன.

குருகுல முதல்வர் மற்றும் முன்னாள் இயக்குநர் அவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துரை வழங்கி போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கும், கலைநிகழ்ச்சிகள் வழங்கியோர்களுக்கும் பரிசுகள் வழங்கினர்.

இவ்விழாவில் மொத்தம் 340க்கும் மேற்பட்ட தாய்மார்கள் கலந்து கொண்டது பாராட்டுதற்குரியது. நிறைவாக இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூற தேநீர் விருந்துடன் மாலை 5 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த அலகின் விபரம்

| குறுநாடகம் | |
|---|---|
| முஞ்சிறை | I |
| பத்துகாணி | II |
| சூசைபுரம் | III |
| **தனிநபர் நாடகம்** | |
| மஞ்சாலுமூடு | I |
| மாங்கரை | II |
| வாறுதட்டு | III |
| **கையெழுத்து பிரதி** | |
| நாகர்கோயில் | I |
| சூசைபுரம் | II |
| களியல் | II |
| முக்கூட்டுக்கல் | III |

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்
இயக்குநர்

## புதிய ஆயர்

சீரோ மலபார் சபையின் இடுக்கி மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருள்பணி ஜான் நெல்லிக்குந்நேல் அவர்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஜனவரி 12 அன்று நியமித்துள்ளார்.

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## குறும்பட உருவாக்கல் பயிற்சி முகாம்

தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்கம் மற்றும் சங்கனாச்சேரி புனித ஜோசப் ஊடகக் கல்லூரியும் இணைந்து ஊடகத்துறையில் இளைஞர்களை உருவாக்கும் விதமாக மூன்று நாள் குறும்பட உருவாக்கல் பயிற்சி முகாம் கருங்கல் புனித அல்போன்சா கல்லூரியில் வைத்து நடத்தியது. ஜனவரி 26 அன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமான மூன்று நாள் பயிற்சி முகாமை சங்கனாச்சேரி ஊடகவியல் கல்லூரி ஆசிரியர்கள் வழிநடத்தினார்கள். இம்முகாமில் கதை உருவாக்குதல் திரைக்கதை



எழுதுதல், இயக்குதல், நடித்தல், ஒளிப்பதிவு செய்தல் ஆகியவை பயிற்றுவிக்கப் பட்டது. 22 இளையோர்கள் கலந்து கொண்டனர். நிறைவு விழாவில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை கூறி சான்றிதழ் வழங்கினார். இரண்டு குறும்படம் தயாரித்து, வெளியிடப்பட்டது. இரவு சுடரொளி நடனமும் நடைபெற்றன. இயக்குநர் அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் அனைத்து ஏற்பாடுகளும் செய்திருந்தார்.

## மாதர் ஜோதிஸ் ஆண்டுவிழா

ஜனவரி 7 அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கில் நடைபெற்ற மறைமாவட்ட மாதர் ஜோதிஸ் இயக்க ஆண்டுவிழாவை மெருகூட்டும் விதமாக கிள்ளியூர்



இளையோர்கள் குறுநாடகமும், வயலின் இளையோர்கள் நடன நிகழ்சியும் வழங்கினர்.

செல்வி. பபிஷா| செயலர்.

## புதிய ஆயர்

சீரோ மலபார் சபையின் சாகர் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக ஜேம்ஸ் அத்திக்கலம் அவர்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நியமித்துள்ளார்.



VINCENT-DE-PAUL
வின்செந்தியர்



# தக்கலை மத்திய சபை

## தலைமைத்துவப் பயிற்சி

தக்கலை மத்திய பேரவைக் குட்பட்ட அனைத்து கிளைச் சபைத் தலைவர், செயலர், பொருளர் ஆகியோருக்கான தலைமைத்துவப் பயிற்சி 14.1.2018 அன்று மதியம் 2.30 மணிமுதல் 4.30 மணி வரை நடைபெற்றது.

ஓசாணம் உயர்கல்வி நிலைய ஆசிரியர்களால் காணொலி காட்சி வடிவமைக்கப் பட்டது. 'உம் அழகான கண்கள் என்னை கண்டதாலே' என்னும் காணொலி காட்சிப் பாடலுடன் நிகழ்வு இனிதே தொடங்கியது. 2 கொரி 10: 7-17 வரையிலான விவிலியப் பகுதி வாசிக்கப்பட்டது. கையேட்டிலிருந்து நிர்வாக குழுவினரின் பொறுப்புகள் என்னும் பகுதி வாசிக்கப்பட்டு சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

மத்தியப் பேரவைத் தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் அனைவரையும் வரவேற்றார், வாரக்கூடுகை அறிக்கை மற்றும் வரவு செலவு அறிக்கை பதிவு செய்தல் பற்றி செயலர் சகோ. எட்வின்சன் அவர்கள் விரிவாக விளக்கமளித்தார். மாத அறிக்கை பற்றி சகோ. ராபி அவர்களும், ஆண்டறிக்கை பற்றி சகோ. வின்சென்ட் ராஜ் அவர்களும் வகுப்புகள் நடத்தினர். மத்தியசபை துணைத்தலைவரும், தேசிய சபை உறுப்பினருமான சகோ. சௌந்தரராஜ் அவர்கள் பொறுப்பாளர்களுக்கான பண்புகள் பற்றி எடுத்துரைத்தார். மஞ்சாலுமூடு வட்டாரசபை தலைவர் சகோ. விஜயராஜன் அவர்கள் நன்றி கூற, இறுதி செபத்துடன் இனிதே நிறைவடைந்தது. அனைத்து வட்டாரசபைத் தலைவர்களும், கிளைச்சபை பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

## பொன்விழா

பளுகல் புனித தோமையார் கிளைச்சபை தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவையொட்டி நன்றித் திருப்பலி மற்றும் பொன்விழா பொதுக்கூட்டம் 28.01.2017 அன்று பளுகல் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மேதகு ஆயர்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் சச ஆண்டகையோடு முன்னாள் பங்குத்தந்தை மாத்யூ ஓடலானி அவர்களும், தற்போதைய பங்குத்தந்தை அருட்தந்தை ஜேக்கப் அய்யமாத்ர அவர்களும் இணைந்து நன்றி திருப்பலி நிறைவேற்றினர். முன்னதாக உறுப்பினர்கள் அனைவரும் ஒருநாள் தியானத்தில் பங்கெடுத்து ஒப்புரவு பெற்றனர். தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தொடக்க செபத்தை மத்தியசபைச் செயலர் சகோ. எட்வின்சன் அவர்களும், வரவேற்புரை சகோ. வின்செண்ட் அவர்களும் கூறினார். ஆயர் அவர்கள் தலைமையுரையாற்றி முன்னாள் உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி, பொன்விழா மலரையும் வெளியிட்டார். முதல் பிரதியை முன்னாள் பங்குத்தந்தை பேரருட்தந்தை மாத்யூ ஓடலானி அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தேசிய சபை உறுப்பினர் சகோ. சௌந்தரராஜ், மத்திய சபைத்தலைவர் சகோ. அய்யாத்துரை, மத்தியசபை உறுப்பினர் சகோ. குமரித்தோழன், முன்னாள் மத்தியசபைத்துணைத்தலைவர் சகோ. மரியதாஸ், காருண்யா நிதி பொறுப்பாளர் சகோ. ஜோஸ், குழித்துறை மத்திய சபை பிரதிநிதி சகோ. மேரி புஷ்பம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

படந்தாலுமூடு மறைவட்ட ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை றோபின்ஸ் குழிகோடில் அவர்கள் திருமண நிதி உதவித் திட்டத்தை தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். அருட்தந்தை ஷோஜோ, அருட்தந்தை ஜினு ஆகியோரும் கலந்து கொண்டனர். நிறைவாக பொன்விழா மலர் ஒருங்கிணைப்பாளர் சகோ. செபமணி நன்றி கூறினார். சகோதரி சர்மின் சுனில் அவர்கள் நிகழ்வை தொகுத்து வழங்கினார். படந்தாலுமூடு வட்டாரசபைத் தலைவர் சகோ. ஜெபராஜ் அவர்களின் இறுதி செபத்துடன் இனிதே நிறைவடைந்தது. இடை யிடையயே பங்குமக்கள் சார்பில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. நிறைவில் அன்பின் விருந்தும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜேக்கப் அய்யமாத்ர அவர்கள் தலைமையில் கிளைச்சபை யினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## உறவு 2018

கல்லுவிளை அன்னை தெரசா ஆலயத்தின் பக்த சங்கங்கள் மற்றும் உறவிய ஆண்டு விழா கல்லுவிளை KKSSS அரங்கத்தில் வைத்து 'உறவு 2018' எனும் தலைப்பில் ஜனவரி 28ம் தேதியன்று மதியம் 4.30 மணியளவில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்சி பங்கு தந்தை



சஜி எலம்பசேரில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக முக்கூட்டுக்கல் இளம் குருமட அதிபர் அருட்தந்தை ஜோஸி குளத்துங்கல் அவர்கள் கலந்து கொண்டு, 'குடும்பங்களின் கொண்டாட்டமே உறவு, உறவுகளின் கொண்டாட்டமே உறவியம், இறைவனை அன்பு வழியாக காணலாம். குடும்பங்கள் இணைந்து செபிக்கும் போது இங்கு இறைவனை காணலாம்' என்று வாழ்த்துரையாற்றினார். சீனாய் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மிஜோ அவர்கள் வாழ்த்துரை வழங்கி பேசும் போது, 'செபம் தான் உறவுகளின் பலமாக இருக்கிறது நாம் ஒன்று கூடி செபிக்கும் போது மனதில் கிறிஸ்து இயேசு பிறக்கிறார், அதுவே மகிழ்வின் அச்சாரம்' என்று கூறினார். இதில் அருட்சகோதரர் மகேஷ் மற்றும் அருட்சகோதரிகள், பங்கு மக்கள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வுகளை கருணாலயம் அருட்சகோதரிகள் ஒருங்கிணைத்தனர்.

## பாதுகாவலர் தினம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் பாதுகாவலர் முத். தேவசகாயம் பிள்ளை தினம் கல்லுவிளை KKSSS அரங்கத்தில் ஜனவரி 15 ஆம் தேதியன்று மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆயர் அவர்கள், தேவசகாயம் பிள்ளை வாழ்வில் இருந்த எளிமை, மனஉறுதி, அனைவரையும் சமமாக மதிக்கும் பண்பு ஆகியவை நம்மிடம் வளர வேண்டும். பல ஏழை மக்கள் வாழ்வு மலர இங்கு பணியாற்றும் உங்களை

மனமார வாழ்த்துகிறேன் என்று வாழ்த்துரை வழங்கினார். பின்பு தேவசகாயம் பிள்ளை பற்றிய சிறப்பு செய்தியை வெட்டுர்ணிமடம் கிறிஸ்து அரசர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை அருள் ஆனந்த் அவர்கள் வழங்கினார்.




அப்போது அவர், புகழ் மயக்கம் உலகில் அதிகமாக உள்ளது. புகழுக்கு மயங்காதவரால் தான் எளிதில் இறைவனை அடைய முடியும். புகழுக்கு மயங்காது, கடுமையான சூழலிலும் இறைவனை பற்றிய நம்பிக்கை மற்றும் சாதிய வேறுபாடற்று இருந்ததால் தான் தேவசகாயம் பிள்ளை இன்று மறைசாட்சியாக இருக்கிறார் என்றுரைத்தார். பின்பு இவ்வாண்டுக்கான சமூக சேவகி விருது மாலைக்கோடு பகுதியைச் சார்ந்த திருமதி. சுதா அவர்களுக்கு மேதகு ஆயர் அவர்கள் வழங்கினார். பின்பு இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பசேரில் அவர்கள் எழுதிய Learn English Cheerfully புத்தக வெளியிட்டு விழா நடைபெற்றது.

மேதகு ஆயர் அவர்கள் வெளியிட கார்மல் மாதா முதல்வர் அவர்கள் முதல் பிரதியை பெற்று கொண்டார். அடுத்த பிரதியை நாஞ்சில் பால்பண்ணை இயக்குநரும், அடுத்தடுத்த பிரதிகளை குமரித் தோழன், திருமதி சுதா அவர்களும் முளகுமுடு இரண்டாம்




ஜான்பால் கல்வியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஜஸ்டின் அவர்களும் பெற்றுகொண்டனர். புத்தக முன்னோட்டத்தை ஜான்பால் கல்வியல் கல்லூரி முதல்வர் மற்றும் கார்மல் மாதா பள்ளி முதல்வரும் தெரிவித்தனர். இறுதியாக திட்ட அலுவலர் திருமதி ஷீபா அவர்கள் நன்றியுரை கூறினார். நிகழ்வில் கன்னியாகுமரி கார்மல் மாதா மெட்ரிக் பள்ளி முதல்வர் அருட்சகோதரி கிளேயர்லெட், நாஞ்சில் பால்பண்ணை இயக்குநர் அருட்தந்தை ஜெரால்டு ஜெஸ்டின், துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப், எழுத்தாளர் குமரித்தோழன், மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஆலோசனை

குழு உறுப்பினர்கள், மற்றும் அலுவலகப் பணியாளர்கள், பாலர்பள்ளி ஆசிரியர்கள், களப்பணியாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### குழந்தைகள் பாராளுமன்றம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் நடத்தப்படும்



அன்னை தெரசா குழந்தைகள் பாராளுமன்றம் என்ற அலகின் அறிமுக விழா மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராட்டு விழா ஜனவரி 14ஆம் தேதியன்று புனித ஜேம்ஸ் உயர்நிலை பள்ளி வளாகத்தில் பங்குதந்தை அலெக்ஸ் புத்தேட் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது அவர், குழந்தைகள் இளம் வயதியே சமூக பெறுப்புடன் வளர வேண்டும் அப்போது தான் சிறந்த தலைவர்கள் உருவாக முடியும் என்று கூறினார். சிறப்பு விருந்தினராக அல்போன்சா கல்லூரி உடற்கல்வி பேராசிரியர் திரு. சீலன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கன்னியாகுமரி சமூக சேவை சங்க சுயஉதவிக்குழு ஒருங்கிணைப்பாளர் செல்வன். ராஜசேகர் வாழ்த்துரை வழங்கினார். சாதனை உறுப்பினர்களுக்கு பாராட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. இடையே உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. குழந்தைகள் பாராளுமன்ற ஊக்குவிப்பாளர் திரு. ரவிக்குமார் அவர்கள் நிகழ்சியை ஒருங்கிணைத்தார். இதில் 35 குழந்தைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

### SPARK

ஏழை மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தும் நோக்கில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் நடத்தப்படும் EDUCARE மாணவர்களுக்குகான விடுமுறைகால முகாம் சங்கமத்தில் வைத்து SPARK எனும் தலைப்பில் ஜனவரி 13 முதல் 16 வரை 4 நாள்கள் நடைபெற்றது. இதில் சுமார் 163 மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். இப்பயிற்சி முகாம் சலேசியன் துறவறசபையின் அருட்தந்தை ஆன்றனி மற்றும் அருட்தந்தை போபி இவர்களோடு முனைவர் பட்ட பயிற்சி மாணவர்கள் சகோதரர்கள் ஜார்ஜ் ஜெரோம், அமல் ஆகியோரால் வழங்கப் பட்டது. முகாமில்

எல்லா நாட்களிலும் திருப்பலி நடைபெற்றது. மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் தெளிவாக பேசவும் பிழையில்லாமல் எழுதவும், வளர்ச்சிக்கு உதவுகின்ற விளை யாட்டு கல்வியும் வழங்கப்பட்டன. பேச்சுத் திறமை, ஆளுமைத் திறமை தலைமைத்துவ பண்பு ஆகியவற்றிற்கான வகுப்புக்களும் வழங்கப்பட்டது. இரவு நடைபெறும் புதுமையான நிகழ்ச்சிகள் மாணவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தின. முகாமின் நிறைவு விழா இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பசேரில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக அருட்தந்தை அஜின் அவர்கள் கலந்து கொண்டார். புதிய திறமையாளனாய் புத்துயிர் பெற்று வீடு திரும்பியது மாணவர்களின் மனதில் மறக்க முடியாத நாட்களாக இந்த நாட்கள் அமைந்தது.

மருத்துவ முகாம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கமும், பளுகல் சுயஉதவிக்குழு மற்றும் ATSVS முஞ்சிறை மருத்துவமனையும் இணைந்து நடத்திய சித்த மருத்துவ முகாம் பளுகல் புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அருட்தந்தை ஜேக்கப் சக்கரியா அவர்கள் தலைமை தாங்கினார். இதில் ATSVS துணை முதல்வர் Dr. அரவிந்த் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். துணை இயக்குநர் அருட்தந்தை வினு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 340 பேர் கலந்து கொண்டு இலவச பரிசோதனை செய்து இலவச மருந்தும் பெற்றனர். இதில் 3 மருத்துவர்கள் உட்பட 20 பயிற்சி மருத்துவர்களும் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை சஜி எலம்பசேரில்
இயக்குநர்

| வரவிருக்கும் நிகழ்வுகள் | |
|---|---|
| பிப்ரவரி 01-10 | இந்திய ஆயர் பேரவை - பெங்களூர் |
| பிப்ரவரி 09 | பேருட்தந்தை பிலிப் கொடியந்தறா அவர்களின் ஐந்தாண்டு நினைவு |
| பிப்ரவரி 10, 11 | மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா- கல்லுவிளை |
| பிப்ரவரி 12 | சாம்பல் திங்கள் |
| பிப்ரவரி 14 | அருட்தந்தையர் கூடுகை- சங்கமம் |
| பிப்ரவரி 17 | இளங்குருமட தினம்- முக்கூட்டுக்கல் |
| பிப்ரவரி 20 | மறைமாவட்டங்களுக்கிடையேயான கூடுகை |

## செங்கோட்டைச் செய்திகள்

### தியானம்

செங்கோட்டை மறைபரப்பு தளத்தில் ஒருநாள் தியானம் ஜனவரி 13 அன்று வாஞ்சி ஆலயத்தில் நடைபெற்றது. சீனாய் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மிஜோ அவர்கள் குடும்பம் ஆன்மீகத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற தலைப்பில் தியான உரை வழங்கினார். தொடர்ந்து அருட்தந்தை மெர்சி அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்.

### மிஷன் லீக்

மிஷன் லீக் இயக்க ஒருநாள் கூடுகை அருட்தந்தை ராஜேஷ் MCBS அவர்கள் தலைமையில் அன்பு இல்லத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை அவர்கள் இறையழைத்தல் பற்றி வகுப்பு நடத்தினார். அன்பு இல்ல அருட்சகோதரிகளோடு நேர்முகப் பயிற்சியும் வழங்கப்பட்டது. அவர்கள் தங்கள் பணிகளை பற்றி விளக்கமளித்தனர். அருட்சகோதரி ஜென்னி CMC அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்.

### துறவறத்தார் கூடுகை

செங்கோட்டை மறைபரப்புதள அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் கூடுகை 27.1.2018 அன்று புளியரை சி.எம்.சி துறவற இல்லத்தில் வைத்து நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை சத்தியநேசன் அவர்கள் தலைமையேற்று நடத்தினார். ஆராதனை மற்றும் ஒப்புரவு அருளடையாளம் நடைபெற்றது. பேரருட்தந்தை சத்தியநேசன் அவர்கள் மறைபரப்பு பணி பற்றியும் பொதுநிலையினரை அதற்காக சீனாய் தியான இல்லத்தில் நடைபெறும் பயிற்சிகளுக்கு அனுப்பவும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து செங்கோட்டை செயல்பாடுகள் பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. நிறைவில் அருட்தந்தை ரெஜி எம்.சி.பி.எஸ் அவர்கள் நன்றி கூற அன்பு விருந்துடன் நிறைவு பெற்றது.

அருட்தந்தை ஜாண்பால்
ஒருங்கிணைப்பாளர்

## பெண்கள் விடுதி

SABS அருட்சகோதரிகளால் சூசைபுரத்தில் கட்டப்பட்ட பெண்களுக்கான விடுதியை ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் ஜனவரி 6 அன்று மந்திரித்து திறந்து வைத்தார். இவ்விடுதி புனித அல்போன்சா கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு பேருதவியாக அமையும்.

# மறைவட்ட செய்திகள்




## நித்திரவிளை மறைவட்டம்

### புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் தனகா திருநாள் ஜனவரி 5 அன்று மாலை 6 மணியளவில் சிறப்புத் திருப்பலியுடன் கொண்டாடப் பட்டது. அருட்தந்தை அஜீஷ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி, இறைமகன் இயேசுவின்



திருமுழுக்கை நினைவு கூர்ந்து மறையுரையாற்றினார். அவர், நாம் அர்பிக்கும் இவ்வழிபாடுகள், சட்ட திட்டங்களுக்கு கீழ்படிந்த திருமுழுக்கு யோவானின் கீழ்படிதலையும், ஒளியாம் இறைவனை வரவேற்க நமக்கு தூய்மையான மனநிலையையும் வழங்குகிறது என்று கூறினார். திருப்பலி நிறைவில் வாழைத் தண்டுகளை நட்டு வைத்து உறவியம் வாரியாக சுமார் 1000 விளக்குகள் ஏற்றி தனகா திருநாள் (பிண்டி குத்தி திருநாள்) கொண்டாடப்பட்டது. அனைத்து மக்களும் பக்தியுடன் பங்கேற்றனர்.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### நற்செய்திப் பெருவிழா

மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நற்செய்திப் பெருவிழா நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் நடைபெற்ற 25 வது நற்செய்திப் பெருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### உறவிய பொறுப்பாளர் கூட்டம்

ஜனவரி 27 அன்று மஞ் சாலுமூடு மறைவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலுள்ள உறவிய பொறுப்பாளர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. உறவிய இயக்குநர் அருட்தந்தை ஜோஷி அவர்கள் இக்கூடுகையை வழிநடத்தினார்.

## படந்தாலுமூடு மறைவட்டம்

### பொங்கல் திருநாள்

அதங்கோடு தூய மரிய கொரற்றி ஆலயத்தில் தமிழர் திருநாளான பொங்கல் திருநாள் ஜனவரி 15 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருப்பலிக்குப் பின்னர் பங்குமக்கள் புதுப்பானையில் புத்தரிசியிட்டு பொங்கல் விழாவை கொண்டாடத்

தொடங்கினர். பங்குத்தந்தை அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் புத்தடுப்பில் தீவைத்து பொங்கலை தொடங்கி வைத்தார். இளையோர்கள் பொங்கல் கோலமிட்டு சிறப்பித்தனர். தொடர்ந்து பொங்கல் மற்றும் கரும்பு அனைவருக்கும் வழங்கப்பட்டது.



தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா|சினேக லதா|செலின் மேரி

## கருணை இல்ல வெள்ளி விழா

கல்லுவிளை சமூக சேவை சங்கத்தின் கீழ் இயங்கி வரும் நித்திரவிளை பகுதியில் மாற்றுத்திறனாளிகளுக்காக 25 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் கருணை இல்லத்தின் வெள்ளி விழா ஜனவரி 17 மற்றும்20 ஆகிய இருநாட்களின் நடைபெற்றது. வெள்ளிவிழா நன்றி திருப்பலி 17 அன்று ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து நற்கருணை ஆராதனை நடைபெற்றது. ஆயர் அவர்கள் புதிய கலை அரங்கையும், விளையாட்டு மைதானத்தையும் மந்திரித்து திறந்து வைத்தார். 20 அன்று பொதுக்கூட்டமும், சிறப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன. மேதகு ஆயர் அவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு வெள்ளிவிழா பேருரையாற்றினார். கருணை இல்ல இயக்குநர் பேரருட்தந்தை சனல் அவர்கள் அனைவரையும் வரவேற்க, நிறுவன முதல்வர் அறிக்கை சமர்ப்பித்தார். சிறப்பு நிகழ்வாக வெள்ளிவிழா மலர் வெளியிடப்பட்டது. மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## சீனாய் இறையியல் வகுப்பு

பொதுநிலையினருக்கான மூன்றாண்டு பட்டைய இறையியல் கல்வி வகுப்புகள் மே மாதம் முதல் நம் மறைமாவட்டத்தில் தொடங்க உள்ளன. இப்பட்டைய படிப்பு ஞாயிற்றுக்கிழமை மதியத்திற்குப்பின் தக்கலை சங்கமத்தில் நடைபெறும். பொதுநிலையினரின் விசுவாசத்தை உருவாக்கவும், திருச்சபை வரலாறு, வழிபாட்டு முறை, பாரம்பரியம், இறையியல் போன்றவற்றை தெரிந்து கொள்ளவும் இப்பயிற்சி வழிவகுக்கும். இதன் இயக்குநராக முனைவர் அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் செயல்பட்டுவருகிறார்.

## BISHOP'S ENGAGEMENTS FEBRUARY 2018

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1-9 | Thu | 02.00 pm | CBCI Meeting at Bangalore |
| 9 | Fri | 05.00 pm | Death Anniversary of Mons. Philip Kodiyanthara |
| 10 | Sat | | Chennai: Marriage Qurbana >> Mumbai |
| **11** | **Sun** | **09.30 am** | **Mumbai: Kalyan, Jubilee Qurbana** |
| 12 | Mon | 08.00 am | Mumbai: Ash Monday Holy Qurbana |
| 13 | Tue | 09.00 am | >> Thuckalay |
| | | 03.00 pm | Alphonsa College GB Meeting |
| 14 | Wed | 09.30 am | Priest Conference |
| 15 | Thu | 09.30 am | Curia meeting |
| | | 02.00 pm | AIDACT Talent Fest |
| 16 | Fri | 10.00 am | Soosaipuram: National Seminar of English Depart |
| | | 05.00 pm | Christurajapuram: School Annual Day |
| | | 08.00 pm | Vincent De Paul Guests from England |
| 17 | Sat | 10.00 am | Minor Seminary: Home Day Celebration |
| | | 05.00 pm | Vavode: FCC School Jubilee Celebration |
| **18** | **Sun** | **07.20 am** | **Marthandam: Confirmation and Holy Qurbana** |
| 19 | Mon | 05.00 pm | Anayadi: Parish Visit |
| 20 | Tue | 10.00 am | Palai: Inter-Dioceses Meet |
| 21 | Wed | 05.00 pm | Christurajapuram: Visit to SMSM convent |
| 22 | Thu | 06.00 pm | Kalluketti: MMM convent Holy Qurbana |
| 23 | Fri | | Visit to Shenkottai Mission |
| 24 | Sat | 02.00 pm | Padanthalumoodu: Meeting with Mission Volunteers |
| **25** | **Sun** | **07.45 am** | **Anamugam: Pastoral Visit** |
| 26 | Mon | | Visit to North East for Jubilee Celebration |
| 27\|28 | Tue | | North East |

Fr. Thomas Sathianesan | Eparchial Chancellor

### கூடுதல் பொறுப்பாக

காட்டாத்துறை பங்குத்தந்தை அருட்தந்தை அனில்ராஜ் அவர்கள் 5 மாத அச்சு தொழில்நுட்ப பயிற்சி பயில சென்னை SIGA சென்றுள்ளார். அவர் பணியாற்றிய காட்டாத்துறை பங்கின் பொறுப்புகளை கூடுதலாக அருட்தந்தை ஜாண் ஜோசப் அவர்கள் கவனிப்பார்.



Skit by TCYM, Matru Jyotis Anniversary
07.01.2018



Catechism Competitions, Padanthalumoodu
15.01.2018




Karunai Illam Jubilee - Thanks Giving Day
17.01.2018

Matru Jyotis - Anniversary, 07.01.2018





# Praying for a Fruitful Lent

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570